*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*15(2), 2022*

# நாட்டுப்புற வழிபாடுகள் ஒரு நோக்கு

**விக்னேஸ்வரி பவநேசன்**
இந்து நாகரிகத் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Correspondence: pvigneswary@univ.jfn.ac.lk

**கட்டுரைச் சுருக்கம்**

நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகளையும் கலை மரபுகளையும் இலக்கியங்களையும் அறிந்து கொள்ளும் இயலே "நாட்டுப்புறவியல்" ஆகும். இங்கு 'நாட்டுப்புறம்' என்பது கல்வியறிவில்லாத கிராமியப் பகுதிகளைக் குறிக்கும். இவர்கள் கிராமத்தான், பாமரன், நாட்டுப்புறத்தான், ஊர்மகன் எனப்பலவாறு அழைக்கப்படுகின்றனர். இவை யாவும் கிராமத்தில் வாழும் மக்களையே குறிக்கும். நாட்டுப்புற மக்களால் பெரிதும் பின்பற்றப்படும் சமயம் 'நாட்டுப்புறச் சமயம்' எனப்பெயர் பெறுகின்றது. இதில் வழிபடப்படும் தெய்வங்கள் நாட்டுப்புறத் தெய்வங்கள் என அழைக்கப்படுகின்றன. பெரும்பான்மையாக இம்மக்களின் மரபு வழிவந்த குலமுன்னோர்களை அவரவர் தமது வழிபடு தெய்வங்களாகக் கொண்டுள்ளனர். தமக்கும் தமது சமூகத்திற்கும் நன்மை செய்து இறந்துபட்ட முன்னோர்களை அவ்வக்காலத்தில் வாழ்ந்தவர்கள் தெய்வங்களாகக் கருதி வழிபட்டு வந்துள்ளனர். நாட்டுபுறத் தெய்வங்கள் வழிபாடுகளின் அடிப்படையில் குடும்பத்தெய்வம், குலதெய்வம், ஊர்ப்பொதுத்தெய்வம் என மூன்று வகையாக அமைகின்றன. நாட்டுப்புறவழிபாடு சங்ககாலம் முதலாக இருந்து வரும் நெறியாகும். சமூகத்தின் பண்பாடு, அறிவியல், தொழிநுட்பம் போன்ற துறைகளின் வளர்ச்சியில் நாட்டுப்புறவழிபாடு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது, என்பதை எடுத்துக் கூறுவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இவ்வாய்வில் வரலாற்றியல், சமூகவியல் மற்றும் ஒப்பீட்டு முறையியல் சார்ந்த ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள்:** நாட்டுப்புறவியல், நம்பிக்கை, தெய்வம், வழிபாடு, சடங்கு, மக்கள், பழக்கவழக்கம், விழா, பண்பாடு, இலக்கியம்

## 1. அறிமுகம்

இன்று நிலவுகின்ற வழிபாட்டு முறைகளை இரண்டு பிரிவாக நோக்கலாம். அவையாவன வேதாகம விதிகளுக்கு அமைந்த வழிபாடுகள் வேதாகம வழிபாடுகளுக்கு முற்றிலும் அமையாத கிராமிய அல்லது நாட்டுப்புறத் தெய்வ வழிபாடுகள் என்பனவாகும். மனித வாழ்வில் இடம்பெறும் சமூக நிறுவனங்களில் சமயமும் ஒன்றாகும். சமயம் என்பது புனிதமான ஒன்றைப் பற்றிய நம்பிக்கைகளும் செயல்முறைகளும் அடங்கிய ஓர் ஒழுங்கமைந்த முறை எனலாம். சமயம் என்பது பெரும்பாலும் செந்நெறி மயப்பட்டதாகவே கருதப்படுகின்றது. அதனால் அடிநிலையிலுள்ள நாட்டுப்புற அல்லது கிராமிய வழிபாட்டு நடைமுறைகள் அதிகம் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை. உலகின் பல்வேறு இன மக்களிடையேயும் தொன்று தொட்டே நாட்டுப்புற வழிபாடு வழக்கில் இருந்து வந்துள்ளமையை அறியமுடிகின்றது. இவ்வகையில் நாகரிக முற்கால ஆதிவாசி இனக்குழுவினர் முதல் நாகரிகத்தில் உயர்ந்தோர் வரை இவ்வழிபாட்டை பல்வேறு முறைகளில் நிகழ்த்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய வழிபாட்டில் ஆண்தெய்வங்கள், பெண் தெய்வங்கள் என்பன முக்கிய இடம் பெறுகின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் பண்டைக்காலம் தொட்டு மக்கள் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப வழிபாட்டு முறைகளை ஏற்படுத்திக்கொண்டனர். இவ்வழிபாட்டு முறைகள் குறித்த சமூகங்களின் வழக்கங்களுடன் ஒன்றுபட்டு விளங்கின. பண்டைக்காலத்தில் தாயை வழிபடும் முறையே எங்கும் பெருவழக்காக இருந்து வந்துள்ளது. அக்காலத்திலே தோன்றியது அம்மன் வழிபாடு. இவ்வழிபாட்டு முறை இந்தியா எங்கும் நிலவி வந்தது. வங்கநாட்டில் இன்று பெருவழக்கில் உள்ளது. திராவிட நாட்டிலும் இவ்வணக்கமுறை உண்டு. சிறப்பாக பொதுமக்களுக்குள் இவ்வணக்கமுறை பெரிதும் நிலவுகின்றது. காளி, பேய்ச்சியம்மன் முதலிய பெண்தெய்வ வழிபாடுகள் இம்முறைக்குள் அடங்கும். சங்ககாலம் தொட்டு தமிழ் மக்களுக்குள் வீரவழிபாடு

இருந்து வந்தது. சங்கநூல்களில் காணப்படும் நடுகல்வணக்கம் இங்கு குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தில் எழுந்த அண்ணமார், நாச்சிமார், மதுரைவீரன், கண்ணகை முதலிய தெய்வ வழிபாடுகள் வீரவழிபாட்டின் கீழ் அடங்கும்.

இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் நாட்டுப்புற வழிபாடுகள் தடைப்பட்டு கிறிஸ்தவ வணக்கம் ஆட்சியாளர்களால் நிறுவப்பட்டது. அதனால் நாட்டிலே நிலவிய தெய்வ வணக்கங்கள் மறைவிலேயே செய்யப்பட்டு வந்தன. இதனால் வெளிப்பார்வைக்கு கிறிஸ்தவ பக்திமான்களாகத் திகழ்ந்த எம்மூதாதையர் வீட்டிற்குள் மிகுந்த பயபக்தி உள்ள சைவர்களாக இருந்தனர். அதனால் அதுவரை வெளிப்படையாகச் செய்யப்பட்டு வந்த வழிபாடுகள் யாவும் வீட்டிற்குள்ளேயே செய்யப்பட்டு வந்தன. இக்காலத்தில் தான் அடுப்புநாச்சியார் என்னும் தெய்வத்தை வழிபடும் வழக்கம் எழுந்தது. தமிழக மக்களிடமும் இலங்கை மக்களிடமும் பல்வேறு வகையான தெய்வங்கள் வழிபாட்டில் உள்ளன. ஐயனார், பிடாரி, காளி, காத்தவராயன், மாரியம்மன், சுடலைமாடன், பச்சையம்மன், திரௌபதியம்மன், கண்ணகையம்மன் என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கனவாகும்.

## 2. ஆய்வின் நோக்கம்

தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டால் மனிதர்கள் சில குறிப்பிட்ட நன்மைகளை அடைய முடியும் என வரலாற்றுக்காலகட்டங்களைச் சேர்ந்த மக்கள் நம்பி வந்துள்ளனர். உடல்நலம் வேண்டியும், நோயற்ற நீண்ட வாழ்வு பெறுவதற்காகவும், வம்சாவழி நிலைத்திருக்க வேண்டியும் செல்வவளம் வேண்டியும் என பல்வேறு நோக்கில் இவ்வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. எனவே இத்தகைய பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டும் இயற்றப்படும் நாட்டுப்புற இந்துத்தெய்வ வழிபாடுகள் பற்றி எதிர்கால சந்ததியினரும் அறிந்து கொள்ளும் நோக்குடன் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## 3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு களஆய்வு அடிப்படையில் அமைகின்றது. குலதெய்வவழிபாட்டு மரபுகள், நம்பிக்கைகள், சடங்குகள், பழக்கவழக்கங்கள் என்பனபற்றிக் கூறுமிடத்து விளக்கவியல்முறை பயன்படுத்தப்படுகின்றது. அடுத்து பூசைகள், வழிபாடுகள், சடங்குகள், விழாக்கள் ஆகியனவற்றை உற்றுநோக்கல் முறைமூலம் ஆராய்ந்து தகவல்கள் திரட்டப்பட்டன. மேலும் இக்கோயில் பூசாரிகள், தகவலாளிகள், கோயில் நிர்வாகிகள் ஆகியவர்களிடமிருந்து நேர்காணல் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் வரலாற்றியல் மற்றும் ஒப்பீட்டு முறையியல் ஆகிய ஆய்வு முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டுப்புற வழிபாடுகள் ஒரு நோக்கு எனும் இவ்வாய்வில் வழிபாட்டிற்கான காரணம், வழிபாடுகள் பற்றிய அறிஞர் கருத்துக்கள், தமிழிலக்கியத்தில் வழிபாடுகள், வழிபாட்டின் வகைகள், வழிபாட்டுமுறைகள், நாட்டுப்புறத்தேவதைகள், கோயில் அமைப்பு ஆகிய விடயங்கள் பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

சமூகமாற்றம், நாகரிகவளர்ச்சி என்பன நாட்டுப்புறத் தெய்வவழிபாடுகளை மிக வேகமாக உருமாற்றி வருகிறது. எனினும் நாட்டுப்புற வழிபாட்டுமரபுகள் படிப்படியாக இந்துசமயத்தில் ஈர்க்கப்பட்டு வருவதனையும் நாம் அவதானிக்க முடிகின்றது. எனவே இத்தகைய வழிபாட்டுமரபுகள் அருகிப்போகாதவாறு நிலைபெறச் செய்வது இவ்வாய்வின் பயனாகும்.

## 4. பகுப்பாய்வு

### *4.1 நாட்டுப்புற இயல்*

நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகளையும், கலைகளையும், இலக்கியங்களையும் அறிந்து கொள்ளும் இயலே நாட்டுப்புற இயலாகும். 'நாட்டுப்புறம்' என்பது கல்வியறிவில்லாத கிராமப் பகுதிகளையே குறிக்கும். இவர்களை கிராமத்தான், பாமரன், பட்டிக்காட்டான், நாட்டுப்புறத்தான், ஊர்மகன் எனப் பலவாறு பெயரிட்டு அழைப்பர். இவையாவும் கிராமத்தில் வாழும் மக்களையே குறிக்கும். இவர்களது கலை, இலக்கியங்களைப்பற்றி ஆராயும் நாட்டுப்புற இயல் எனும் சொல்லும் இன்று அறிஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னர் இவர்களைப் பற்றிய ஆய்வுகள் இல்லை என்றே கூறமுடிகின்றது. நாட்டுப்புற இயல்

'Folklore' என்று அழைக்கப்படுகின்றது. இது பற்றி A New English Dictonary குறிப்பிடும் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

'மரபு வழிப்பட்ட நம்பிக்கைகளையும் புராணங்களையும் பழக்கவழக்கங்களையும் பொதுமக்களிடம் இருந்து அறிந்து கொள்வதும், அத்துடன் பண்டைக்காலப் பழக்கவழக்கங்களையும், பொதுமக்களின் இலக்கியங்களையும் கற்பது நாட்டுப்புற இயலாகும். *(சண்முகசுந்தரம்,சு.1982: ப.3)*

### *4.1.1 நாட்டுப்புற இயலின் வகைகள்*

நாட்டுப்புற இயலை இரண்டாக வகுத்து நோக்கலாம்.

1. இலக்கியமல்லாதவை
2. இலக்கியத்துடனானவை

இவற்றில் இலக்கியமல்லாதவற்றினுள் நாட்டுப்புற ஆடல்கள், கூத்துக்கள், கைவினைக்கலைகள், விளையாடல்கள், மருத்துவம், நம்பிக்கைகள், மற்றும் வழிபாடுகள் என்பன உள்ளடங்கும். அடுத்து இலக்கியமானவற்றுள் நாட்டுப்புறக் கதைகள், பாடல்கள், கதைப்பாடல்கள், விடுகதைகள், மற்றும் பழமொழிகள் என்பன உள்ளடங்கும் *(சண்முகசுந்தரம்,சு.1982: ப.4).*

### *4.1.2 நாட்டுப்புற வழிபாடுகள்*

சமயம் என்பது புனிதமான (Secred thing) ஒன்றைப் பற்றிய நம்பிக்கைகளும் செயல்முறைகளும் அடங்கிய ஓர் ஒழுங்கமைந்த முறையாகும் என்பர் எமில் துர்ஹைம் (Emile Dukheim). சமயநம்பிக்கைகள் வரலாற்றுக்காலம் தொடக்கம் இன்றுவரை மனித சமுதாயம் எங்கெல்லாம் வாழ்ந்து வந்துள்ளதோ அங்கெல்லாம் மக்கள் வாழ்வியலோடு வேரூன்றியுள்ளன. நியாண்டர்தால் மனிதன் காலத்திலேயே சமயநம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. இவ்வகை மனிதனிடம் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் இறப்பிற்குப் பின்னும் வாழ்வுண்டு என அவர்கள் நம்பியிருந்தமையை அறியமுடிகின்றது. இத்தகைய நம்பிக்கையினை ஊகிப்பதற்கு அவர்களது கால ஓவியங்கள் உதவுகின்றன. பெரும்பாலான ஓவியங்கள் வேட்டை நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கின்றன. எத்தகைய விலங்குகளை எவ்வாறு வேட்டையாட வேண்டுமென விரும்பினார்களோ அவ்வகையில் ஓவியங்களை வரைந்தனர். அவை அவர்களுக்கு வேட்டையாடும் மனவலிமையையும் வேட்டையில் வெற்றி பெறமுடியும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தின. இத்தகைய எண்ணங்கள் சமய நம்பிக்கைகளுக்கு அடித்தளமாக அமைந்தன. தென்கிழக்காசியாவில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்களான தாழிகளும் இறந்தவர்களை நினைவுபடுத்தவோ இயற்கையின் ஆற்றலுடன் தொடர்பு கொள்ளவோ வைத்திருக்க வேண்டும். இவை நியாண்டர்தால் மனிதனின் நம்பிக்கையைக் காட்டிலும் கூடுதலான சமய நம்பிக்கையை வெளிப்படுத்துவனவாக உள்ளன. *(கனகரத்தினம்,வை. பண்பாட்டியல், மலர்1, இதழ்2, ஏப்ரல் 1997: ப.24)*

உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் ஒரு சமயத்தைச் சார்ந்துள்ளான். ஒவ்வொரு சமயமும் மாறுபட்ட அமைப்பினைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மனிதன் எப்போ தோன்றினானோ அன்றே வழிபாட்டையும் தோற்றுவித்தான் எனலாம். கடலோடு கலக்கும் ஆறுகள் போல எல்லாத் தெய்வ வணக்கமும் என்னையே அடைகிறது என்று கண்ணபிரான் சொன்னது உண்டு. 'ஆறுகளைக் கூட எண்ணிவிடலாம் ஆனால் தெய்வங்களையும், தேவதைகளையும், வழிபாடுகளையும் எண்ணுவதும் எழுதுவதும் அரிதிலும் அரிது' என்று சு.சண்முகசுந்தரம் கூறியுள்ள கருத்து இவ்விடத்தில் நோக்கத்தக்கது *(சண்முகசுந்தரம்,சு.1982: ப.84).* மனித மனத்தில் ஏற்படும் அச்ச உணர்வினாலும், குற்ற உணர்வினாலும் தெய்வங்களை வழிபடும் வழக்கங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். 'தெய்வ வணக்கத்திற்கு காரணம் அச்சமும் அன்பும் என கலைக்களஞ்சியம் கூறுவது போன்று ஆதிக்குடிகள் இயற்கையில் காணும் தீ, பெருமழை, பூகம்பம் போன்ற அச்சந்தரும் நிகழ்ச்சிகளுக்கும் நோய்களுக்கும் காரணம் உலகின்கண் உலவும் கணக்கற்ற ஆவிகளே என்று நம்பியிருந்தனர். அந்த ஆவிகளின் சினத்தைத் தணிக்க அவற்றைத் தேவதைகளாகக் கொண்டு வழிபட்டனர் *(சண்முகசுந்தரம்,சு.1982: ப.84).* ஆதிகாலத்தில் மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர். இயற்கையின் சீற்றத்தால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இயற்கைச் சக்திகளை தெய்வங்களாகக் கருதி வழிபட்டனர். அவ்வாறு கிடைத்தபோது தமது வழிபாட்டிற்கு இயற்கைத் தெய்வங்கள் செவிசாய்த்து விட்டதாகக் கருதி அவற்றிற்கு விழாவெடுத்து நன்றி செலுத்தினர். இந்த இயற்கை வழிபாடே உலகின் தொன்மையான வழிபாடாகக் கருதப்படுகின்றது *(இராமநாதன்,ஆறு. 1986: ப.207).*

### *4.2 வழிபாடு எண்ணக்கரு விளக்கம்*

'வழிபடு' எனும் வேர்ச்சொல்லில் இருந்து 'வழிபாடு' என்ற சொல் பிறந்தது என்பர். இச்சொல் வழியிற்செல்லுகை, பின்பற்றுகை, வணக்கம், பூசனை போன்ற பொருள்களைத் தருகின்றது. (Tamil Lexican, ப.308). ஆனால் வழிபாடு என்ற இச்சொல்லுக்கு வணக்கம், கோட்பாடு, வழக்கம் என்று அகராதி பொருள்தருகிறது. (பவானந்தம்பிள்ளை, தற்காலத்தமிழகராதி, ப.348). வழிபாடு பற்றி க.ப.அறவாணன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "உலகளாவிய கடவுள் நம்பிக்கை, வழிபாடு, பூசை ஆகியவற்றைப் பொறுத்த அளவில் அவை அச்ச அடிப்படையிலும், அன்பு அடிப்படையிலும், எங்கும் தன்னிச்சையாகத் தோன்றித் தழைத்திருத்தல் வேண்டும். அன்பு காட்டுவனவற்றிற்கு நன்றி காட்டுவது, அச்சம் ஊட்டுவனவற்றிற்கு அடிபணிவது மனித செயல்கள்" (அறவாணன்,க,ப. 1979: ப.20).

### *4.2.1 வழிபாட்டின் வகைகள்*

வழிபாட்டினைப் பலவகையாக நோக்க முடிகிறது. அவையாவன, இயற்கை வழிபாடு, ஆவிவழிபாடு, குலக்குறி வழிபாடு, முன்னோர் வழிபாடு, கன்னிவழிபாடு, பலதெய்வ வழிபாடு, நடுகல் வழிபாடு, அக்கினி வழிபாடு, போலியுரு வழிபாடு, தேவதை வழிபாடு, மர வழிபாடு, உயிரின வழிபாடு என்பனவாகும்.

#### 4.2.1.1 இயற்கை வழிபாடு

ஆதிமனிதன் இயற்கையைச் சார்ந்து வாழ்ந்தான். இயற்கையில் கிடைக்கும் பொருட்களான கிழங்கு, கனி, விலங்குகளின் இறைச்சி போன்றன அவனுக்கு உணவாக அமைந்தன. இதனால் இயற்கையை விட்டுத் தனித்த சிந்தனை அவனுக்கு இருக்கவில்லை. காட்டுத்தீ, பெருமழை, வெள்ளம், பூமி அதிர்ச்சி, மற்றும் வறட்சி முதலியவற்றால் அடிக்கடி துன்பத்திற்கு ஆளானான். தனக்கு நன்மை செய்யும் இயற்கை திடீரென துன்புறுவதை கண்டு அஞ்சினான். மனிதனுக்கு உயிர் இருப்பதைப் போன்றே இயற்கைக்கும் உயிர் இருப்பதாக நம்பினான். இதனால் தான் அவை சினங்கொள்கின்றன என்று கருதி, அவற்றைத் திருப்திப்படுத்த எண்ணினான். எனவே அவற்றைப் போலச் செய்வதன் மூலம் முடியும் என்று நம்பினான். இப்போலச் செய்தல் முறைகள் மந்திரச் சடங்குகள் எனப்படும். நாகரிக வளர்ச்சியினால், இச்சடங்குகளால் இயற்கையை கட்டுப்படுத்த முடியாது போகவே மனிதன் அவற்றிற்கு ஓர் அதீத ஆற்றல் உண்டென்பதை உணர்ந்து, அதனைக் கடவுளாகக் கருதி வழிபட்டான். இவ்வாறே இயற்கை வழிபாடு ஆதிக்குடிகளிடையே தொடங்கியது (ஞானசேகரன்,தே.1992: ப.44).

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் ஐம்பூதங்களும் மனிதனுக்கு நன்மை செய்வனவாயும் தீமை செய்வனவாயும் திகழ்ந்தன. நிலம் அவனுக்குக் காய், கனி, கிழங்கு என்பவற்றைத் தந்து நன்மை புரிந்தது. அத்துடன் பயிர் விளையாது வறண்டு அவனுக்குத் தீமையும் செய்தது. நீர் அவனது தாகத்தைத் தணித்தும், பயிர்கள் வளரவும் நன்மை செய்தது. சில சமயங்களில் பெருமழையாகப் பொழிந்தும் கடலாகக் குமுறியும் அவனுக்கு அல்லல் விளைவித்தது. தீ அவன் உணவுகளைச் சுடவும், சமைக்கவும், குளிரிலிருந்து பாதுகாக்கவும் பயன்பட்டது. சில சமயங்களில் எரிபிழம்பாககக் காடுகளை அழித்தது. வீடுகளை அழித்தது, காற்று களைப்புற்ற அவனை மீட்டது. சிலசந்தர்ப்பங்களில் பெரும் புயலாக மாறி அவனது இருப்பிடங்களை அழித்தது. ஆகாயம் (விண்) நிலவாக அவனுக்குக் குளிர்ந்தது. மழையாகப் பொழிந்தது. கதிர் ஒளியாக வீசியது. சிலவேளைகளில் இருள் சூழ்ந்தது. மழைபெய்தது. கதிர் சுட்டது. இயற்கை செய்யும் நன்மைகள் அவனை அவற்றின் மீது அன்பு கொள்ள வைத்தன. அவை படுத்தும் அல்லல்கள் அவனை அச்சப்படுத்தின. இவ்வாறே ஐம்பூத வழிபாடு விளங்கியது. நிலவழிபாடு-பூமாதேவி வழிபாடாயிற்று: நீர்வழிபாடு கங்காதேவி, வருண, மழை, இந்திர வழிபாடாயிற்று: காற்று வழிபாடு வாயு வழிபாடாயிற்று: விண் வழிபாடு சூரிய சந்திர வழிபாடுகளாயின (அறவாணன்,க,ப.1979: ப.20).

#### 4.2.1.2 ஆவி வழிபாடு

சிறுதெய்வ வழிபாட்டின் அடிப்படைக் கூறாக ஆவி வழிபாட்டையே அறிஞர்கள் வலியுயுத்துகின்றனர். இவ்வகையில் இவ்வழிபாடு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. தம் குடும்பங்களில் முதுமையிலோ அல்லது இளமையிலோ இறந்தவரின் ஆவி தம்மைக் கண்காணிப்பதாக நம்பி ஆவி வழிபாட்டினை மேற்கொள்கின்றனர். ஆவிகள் என்னும் போது அவை யாவும் தீய ஆவிகளை மட்டும் குறிப்பதாகக் கொள்ளக் கூடாது. நல்ல ஆவிகளும் உண்டு. இவ்விரண்டு வகையான ஆவிகளுக்கும் செய்ய வேண்டிய பூசைகளைச் செய்து

சாந்தப்படுத்தாவிடின் அவை சினங்கொண்டு தீமை செய்ய முற்படும் என நம்பினர் (மோகன்,ஜெ,1988: ப.13). ஆர்.ஆர் மாரெட் என்பவர் (R.R.Marett) 1909 இல் வெளியிட்ட 'சமயத்தின் வாயிற்படி' (The Thrashold of Religion) என்ற நூலில் ஆவி வழிபாட்டிற்கு முந்தைய நிலையான உயிர்ப்பொருள் வழிபாட்டிலிருந்து (Animatism) சமயம் தோன்றியது. எனக் கூறுகிறார் (கல்லாகவுடர், எச்,என்.1992: ப.32). ஆவியுலக வழிபாட்டைப் பற்றி டைலர் என்பவர் குறிப்பிடுகையில் சமயத்தின் தொடக்கம் ஆவிகளின் பால் ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்து தோன்றியது என்கிறார். ஆதிமனிதன் ஆவியின் சீற்றத்தைத் தணிக்க ஆவியை வழிபட ஆரம்பித்தான். ஆவிகள் தான் அவர்களது செயலைக் கட்டுப்படுத்துவதாக ஆதிமனிதன் நம்பி முன்னோரது ஆவியை வழிபட ஆரம்பித்தான். பெரும்பாலான பழங்குடி மக்கள் ஆவியுலகக் கோட்பாட்டினராவார். தமிழர்களும் ஆவி வழிபாட்டினரே. ஆவி வழிபாடு பற்றி பழந்தமிழ் இலக்கியங்களிலும் அறிய முடிகின்றது. ஆவியுலகக் கோட்பாட்டில் ஆன்மாக் கோட்பாடும் அடங்கும் என டைலர் கூறுவது குறிப்பிடத்தக்கது. இக்கோட்பாட்டில் எழுந்ததே தோடரது பச்சைச் சாவுச் சடங்கும் உலர்ந்த சாவுச்சடங்கும் ஆகும். 'எம்மோர்' (Elmore) என்பவரும் இறந்தவர்களது ஆவிகளை தெய்வங்களின் தோற்றம் எனக் கூறுவது குறிப்பிடத்தக்கது (சக்திவேல்,சு. 1983: ப.223).

#### 4.2.1.3 குலக்குறி வழிபாடு

பழங்குடியினர் சில பொருள்களிலிருந்து தோன்றியவர் என்று நம்புவதால் அப்பொருள்களைப் பாதுகாக்கவும் வழிபடவும் ஆரம்பித்தனர். விலங்கு, பறவை, இயற்கைப் பொருட்களைக் குலக்குறியாகக் கொண்டனர். இவற்றை வழிபடுவதன் மூலம் இவற்றின் ஆற்றல் தமக்குக் கிட்டும் என நம்பினர். குலக்குறி விலங்குகளையோ பறவைகளையோ கொல்வதில்லை. குலக்குறி கால்வழி பகுப்புக்கும் திருமண உறவுக்கும் அடிப்படையாக உள்ளது. குலக்குறி வழிபாட்டை நாட்டுப்புற மக்களிடையேயும் காணமுடிகின்றது. வழிபாடு, நம்பிக்கை முதலியவற்றைக் குலக்குறியம் (Totemism) என்பர். ஒரே குலக்குறியை வழிபடுவோர் ஒரே கால்வழியைச் சேர்ந்தவராக இருப்பர் (சக்திவேல்,சு.1983: ப.224).

'பழங்குடி மக்கள் விலங்கு, செடி, மரம் போன்றவற்றிலிருந்து தங்கள் குலம் தோன்றி வளர்ந்ததாக நம்பினர். அத்தகைய குலக்குறிகள் காலவோட்டத்தில் கடவுளாக உருவம் பெற்று வழிபாட்டிற்குரியதாகிறது (சுப்பிரமணியம்,கா.1980: ப.35). குலக்குறி அல்லது குலமரபுச்சின்னம் என்பது 'குறி' அல்லது அடையாளத்தைக் குறிக்கும். ஓர் இனத்தைப் பாதுகாக்கும் ஆவி வாழ்வதாக நம்பப்படும் மிருகம் அல்லது தாவரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சின்னமாக இக்குலக்குறி பயன்படுத்தப்பட்டது. ஒவ்வொரு குலமும் ஒவ்வொரு வகையான விலங்கோடு அல்லது தாவரத்தோடு அல்லது அந்த வகைகளின் குழுவோடு தொடர்பு கொண்டிருந்தது. அந்த விலங்கு அல்லது தாவரம் அந்தக் குலமரபின் சின்னமாகக் கருதப்பட்டது (ஞானசேகரன்,தே.1992: ப.45).

குலக்குறியின் தோற்றம் பற்றி ஆண்ட்ரூஸ் வாங்க், பிரேசர், வில்கெம்ஸ்மித், ரெட்கிளிப்பிரென் போன்றோர் ஆராய்ந்துள்ளனர். மனிதர்களின் ஆவி விலங்குகளிடம் சென்று உறையும் என்ற நம்பிக்கையில் எழுந்ததே 'குலக்குறி' என 'வில்கெம்' கூறுகின்றார். ஒரு கூட்டத்தினரின் சமூக மனநிலையின் ஒன்றுபட்ட வெளிப்பாடே குலக்குறி என்கிறார் டுர்கைம். பல்வேறு நிகழ்வுகளால் குலக்குறி நம்பிக்கை தோன்றியிருக்கலாம் என வெரியர் எல்வின் எண்ணுகிறார். கொங்குநாட்டில் குலக்குறியை கூட்டம் என்கின்றனர். அங்கு காடைவிநாயகர் கோயிலிருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே குலக்குறி வழிபாடு தொன்மைச் சமுதாயத்தின் ஒரு கூறாகும் (சக்திவேல்,சு.1983: ப.224)

உலகில் சுமார் ஐநூறிற்கும் மேற்பட்ட குலக்குறிச் சின்னங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் மிகுதியும் உழவுத் தொழிலோடு தொடர்புடைய பொருளாகவே உள்ளன. எனினும் வடகிழக்கு ஆஸ்திரேலியாவில் மேகம், மழை, பனி, நிலவு, சூரியன், காற்று, கோடைக்காலம், தீ, புகை, நீர், கடல் போன்றனவும் குலக்குறியாகக் கருதப்பட்டன (Singaravelu, S. 1966: P.141).

#### 4.2.1.4 புனிதப் போலிப் பொருள் வழிபாடு

இயற்கை கடந்த ஆற்றல்கள் சிவபொருள்களில் உறைவதாக மக்கள் எண்ணி அவற்றை வழிபட ஆரம்பித்தனர். அப்பொருட்கள் உயிருள்ளவையாகவோ உயிரற்றவைகளாகவோ இயற்கையானவைகளாகவோ செயற்கையானவைகளாகவோ இருக்கும். இயற்கை மீறிய அற்றல் உடையதென நம்பி வழிபடுகின்றனர். தாயத்துக்கட்டிக்கொள்ளுதல் போலிப்பொருள் வழிபாட்டின்

தொடர்ச்சியாகும். இத்தகைய வழக்கு சிந்துவெளிநாகரிகத்திலும் நிலவியிருந்தமையை அறிஞர்கள் குறிப்பிடுவர். இவற்றிற்கு (தாயத்துகள்) மந்திர ஆற்றல் இருப்பதாகவும் மக்கள் நம்புகின்றனர். இவ்வழிபாடு உலகின் பலபாகங்களிலும் பரவியுள்ளது. இவ்வழிபாட்டு முறையை ஆவியுலக நம்பிக்கையின் தொடர்ச்சி என்று கூறலாம் (சக்திவேல்,சு.1983: ப.225).

**4.2.1.5 முன்னோர் வழிபாடு**

முன்னோர் வழிபாடு இந்துக்கள் வாழும் இடமெல்லாம் காணமுடிகின்றது. பலகுடும்பங்களில் முன்னோர்களை ஆண்டுக்கு ஒரு நாள் நினைத்து வழிபடுகின்றனர். அவர்கள் பயன்படுத்திய பொருள்களைப் பேணி வைத்திருந்து அவற்றுக்கும் மதிப்புக்கொடுப்பது வழக்கமாக உள்ளது. யாத்திரை செல்பவர்கள் வழியிலுள்ள சைவ, வைணவ நாயன்மார்கள் ஆழ்வார்கள் முதலிய பெரியோர்கள் அவதரித்த அல்லது முத்தி அடைந்த பதிகளுக்கும் சென்று வருகின்றனர். இவ்வாறே அவர்களால் பாடப்பெற்ற (தேவாரம், திருவாசகம், திருப்புகழ், பிரபந்தம் முதலியன) கோயில்களை வழிபடுவதும் வழக்கமாக உள்ளது. இத்தகைய கோயில்கள் கடற்கரைகளிலும் தீவுகளிலும், மலைகளிலும் ஆற்றங்கரைகளிலும் மற்றும் பல பகுதிகளிலும் உள்ளன. இவ்வாறு பாடல் பெற்ற தலங்கள் தமிழ் நாட்டில் மட்டுமன்றி கேரளம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், மஹாராஷ்டிரம் ஆகிய இந்திய மாநிலங்களிலும் இலங்கை நேபாளம் ஆகிய இடங்களிலும் உள்ளன. எனவே ஆன்மீகப் பெருமக்களை வழிபடும் தமிழர் மரபு தேசியத்தையும் சர்வதேசியத்தையும் அடிப்படையாகக் கொண்டது (சோமலெ.1975: ப.52).

இன்றைய நடைமுறையில் நாட்டுப்புற மக்களிடம் முன்னோர் வழிபாடு முக்கியபங்கு வகிக்கின்றது. இவ்வழிபாடானது புராதன சமயத்தின் முக்கிய அங்கமாக விளங்கியது. தொல்குடிமக்கள் இறந்துபோன தம் உறவினர்களின் ஆவியை வழிபடுவது முன்னோர் வழிபாடு எனப்பட்டது. உலகெங்கிலும் இவ்வழிபாடு இருந்து வருவதாக அறிஞர்கள் கூறுவர். இறந்தவர்களுக்கும் உயிருள்ளவர்களுக்கும் இருக்கும் தொடர்பும், இறந்தவர்கள் உயிருடன் வேறொரு இடத்தில் வாழ்வதாக நம்புவதும் இவ்வழிபாட்டின் அடிப்படையாகும். அதாவது ஒருவர் செய்த அருஞ்செயல்கள் அவர் இறந்த பின்பும் அவருடைய உறவினருடன் தொடர்புபடுகின்றன எனும் நம்பிக்கையே இம்முன்னோர் வழிபாட்டிற்கு அடிப்படையாகும். இனத்தவர் தோன்றுவதற்கு காரணமாயிருந்தவரை வழிபடுவதும் இவ்வழிபாட்டில் அடங்கும். சீனா, எகிப்து, மற்றும் ரோம் முதலிய இடங்களிலும் இம்முன்னோர் வழிபாடு இருந்துள்ளது. உலகெங்கும் வாழும் இந்துக்கள் ஆண்டுதோறும் திவசம், அமாவாசையன்று நோன்பிருத்தல் இத்தகைய முன்னோர் வழிபாட்டையே சார்ந்ததாகும். இம்முன்னோர் வழிபாடு தொன்மைச் சமயத்தின் ஒரு கூறாகும் என்பது சு.சண்முகசுந்தரம் என்பவரது கருத்தாகும் (சண்முகசுந்தரம்,சு 1983: ப.225).

இறந்தவர்கள் ஆவியாக வாழ்கின்றனர் என்பதை அனைத்துச் சமயங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. இறந்த முன்னோரிடம் கொண்டிருந்த அச்சத்தினால் இவ்வழிபாடு தோன்றியது. இவர்களைப் போற்றி வணங்காவிட்டால் தங்களுக்கு அவர்களால் துன்பம் நேரிடும் என்று ஆதிக்குடிமக்கள் அஞ்சினர். இறப்புச் சடங்குகள் இறந்தவரின் ஆவியைத் திருப்திப்படுத்தி மேலுலகிற்கு அனுப்பி வைக்கும் நோக்கத்தில் செய்யப்பட்டன. இத்தகைய சடங்குகளும் இவை தொடர்பான நம்பிக்கையும் முன்னோர் வழிபாட்டிற்கு வழிவகுத்தன (ஞானசேகரன்,தே.1992: ப.131). இவ்வழிபாடு குறிப்பிட்ட ஓர் இனத்தின் தலைவர் என்ற முறையில் ஆண், பெண் இருபாலருக்கும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

**4.2.1.6 கருவிகளை வழிபடுதல்**

புரட்டாசித்திங்களில் வரும் நவராத்திரி விழாவின் இறுதிநாளன்று கலைமகள் விழாவின் போது புத்தகங்கள், மற்றும் கல்வியுடன் தொடர்புடைய ஏனைய பொருள்கள், மற்றும் தொழில்களில் பயன்படும் இயந்திரக்கருவிகள், பட்டறைப்பொருள்கள், உழவுக்கருவிகள், தட்டச்சுக்கருவிகள், மற்றும் கணணிக்கருவிகள் முதலிய அனைத்தையும் வழிபடும் மரபு உலகெங்கும் நிகழ்ந்து வருகின்றது. அவற்றிற்கு சந்தனம், குங்குமம், என்பன பூசி அவற்றின் முன்னிலையில் சூடம் ஏற்றிவழிபடுவதும் வழக்கமாகும் (சோமலெ.1975: ப.52).

**4.2.1.7 நடுகல் வழிபாடு (வீரவணக்கம்)**

போர் வீரர்களும் வரலாற்று நாயகர்களும் மக்கள் மனத்தில் நிலைத்திருக்கின்றனர். நினைவுச்சின்னங்களான கோட்டை, கொத்தளங்கள், மாளிகைகள், ஒருபுறமிருக்க, அவற்றை விடவும் சிறந்த முறையில் எழுதா இலக்கியங்களான நாட்டுப்பாடல்களும் அவர்களது புகழ்பாடுகின்றன. இவ்வகைப்பாடல்களில் சிறந்தது தென்னார்க்காடு மாவட்டத்துச் செஞ்சியை ஆண்ட தேசிங்குராஜனைப் பற்றியது. இவன் முஸ்லிம் இளவரசன். இருகோட்டைகளைக்

கட்டியவன் இவன் காலம் 17ஆம் நூற்றாண்டு, இவ்வாறே சுதந்திரப்போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான கட்டப்பொம்மன் நினைவாக பாஞ்சாலங் குறிச்சி வீரபாண்டிய கட்டப்பொம்மன் கதைகள் வழங்கிவருகின்றன (சோமலெ.1975: ப.54).

செயற்கரிய செயல்களைச் செய்த வீரர்களைப் புதைத்த இடங்களில் அடையாளமாகக் கல்நட்டு வழிபட்டனர். முக்கிய தினங்களில் வழிபாடு நிகழ்த்தியும் வருகின்றனர். இதுவே நடுகல்வழிபாடு எனப்படும். நடுகல் வழிபாடு பற்றிய குறிப்புக்கள் சங்கஇலக்கியங்களில் காணப்படுகின்றன. இவ்வகையில்

"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விளங்கி
ஒளிறேத்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தென
நெல்லுக்குத்தப் பரவுங்கடவுளுமிலவே" (புறநானூறு 355: 9-12).

எனவரும் புறநானூற்றுப்பாடல் களிறெறிந்து வீழ்ந்த வீரனின் நடுகல்வணக்கம் பற்றிக் குறிப்பிடுகிறது. சிவனடியார்களை வணங்குவதும், அவர்களுக்கு ஆலயங்களில் சிலை வைப்பதும் வழக்கமாய் இருந்திருக்கின்றன. முதலாம் இராஜராஜன் தனது சிலையையும் குடும்பத்தவரது சிலைகளையும் தான் எழுப்பிய தஞ்சைப்பெரிய கோயிலில் பிரதிஷ்டை செய்வித்தான் என்று தெரிகிறது (தாமோதரன்,சி. 1988: ப.24).

வீரர் வழிபாடு பற்றி புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது. பாண்டியர்களுக்குக் கப்பம் கட்டிய சிற்றரசனான மதுரைவீரன், போராட்டங்களில் பலருடைய உயிரைக் காப்பாற்றினான் என்பர். மதுரையில் அவன் ஒரு சிறுகடவுளாகவே இன்றும் வழிபடப்படுகின்றான். அவன் காலத்தைய நிகழ்ச்சிகள் மதுரைவீரன் திருவிழாக்களில் வில்லுப்பாட்டாகப் பாடப்படுகின்றன.

**4.2.1.8 கன்னி வழிபாடு**

பெண்கள் இளம் வயதில் இறக்கநேரின் அப்பெண்களைக் கன்னித் தெய்வமாக வழிபடுகின்றனர். கன்னிப்பெண்கள் மரணமடைந்த போது அவளிடம் சிதைந்து போகாமல் இருந்த சக்திக்கு அஞ்சி மக்கள் தெய்வமாக வணங்குகின்றனர். திருமணமாகாத வயது வந்த பெண்களையும், இளம்வயதுப் பெண்களையும் வழிபடுவதே குமரிப்பூசை அல்லது கன்னிப்பூசை என இராமேந்திரநாத் நந்தி குறிப்பிடுகிறார் (Nandhi, R.N. 1973: PP. 123-124).

தென்னிந்திய மக்கள் ஒரு உயிரிடம் மறைந்து கிடக்கும் ஆற்றல் குறித்து அதிக நம்பிக்கை கொண்டுள்ளனர். உயிர் பிறப்புடனும் அல்லது இறப்புடனும் தொடர்புடையவர்களிடம் கொடூரமான சக்தி அடங்கியிருப்பதாகக் கருதுகின்றனர். இவ்வகையில் உயிரைப்பிறப்பிக்கும் சக்தியுடைய பெண்களுக்கு மிதமிஞ்சிய ஆற்றல் இருப்பதாகக் கருதுகின்றனர். கன்னிவழிபாட்டிற்கு இதுவே ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது.

**4.2.1.9 அக்கினி வழிபாடு**

அக்கினி வழிபாடு உலகெங்கிலும் புனிதமான வழிபாடாக நடைபெற்று வருகின்றது. அக்கினி வேதகாலக் கடவுள், அக்கினியின் பிறப்பிடம் சூரியன் என்றும், பூமியின் நீரில் தேய்ந்த கற்களின் துணையோடு அக்கினி பிறந்தான் என்றும் அகராதியில் கூறப்பட்டுள்ளது. அக்கினி தியாகக் கடவுள் என்றும் அழைக்கப்படுகிறார்.

**4.2.1.10 பலதெய்வ வழிபாடு**

ஒரு கடவுளை மட்டும் வழிபடு தெய்வமாகக் கருதாமல் பல தெய்வங்களையும் கடவுளராக ஏற்றுக் கொள்வது பலதெய்வ வழிபாடாகும். யூதம். கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மூன்று சமயங்களும் ஓரிறைக் கோட்பாட்டினை வலியுறுத்தின. இந்துசமயத்தில் பலதெய்வவழிபாடு காணப்பெற்றாலும் ஒருதெய்வத்தையே படைப்பாளராகவும், பக்திக்கு உரியவராகவும் கருதும் போக்கு இருக்கின்றது. ஆனால் நாட்டுப்புற வழிபாட்டில் பல தெய்வங்களையும், வழிபடுதெய்வங்களாகக் கொண்டுள்ளனர் (ஞானசேகரன்,தே.1992: ப.132).

**4.2.1.11 மந்திரச் சடங்குகள்**

வழிபாட்டில் மந்திரச் சடங்குகளும் ஓர்வகையாகும். சிறுதெய்வ வழிபாட்டில் மந்திரச் சடங்குகள் முக்கிய இடம் பெறுகின்றன. தொல்காப்பியத்திலும் மந்திரம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

*‘நிறைமொழி ஆணையிற் கிளந்த*
*மறைமொழி தானே மந்திரம் என்ப’ (தொல்காப்பியம் செய்: 490).*

*“புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொற்றொடரெல்லாம் மந்திரம் எனப்படும் என மந்திரத்திற்குப் பேராசிரியர் விளக்கவுரை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது (ஞானசேகரன்,தே.1987: ப.2).*

**4.2.1.12 மர வழிபாடு**

*மதத்தின் அடிப்படை உயிர்களை மதிப்பதாகும். உயிரினங்களும் மரம், செடி, வகைகளும் தெய்வத்தன்மை உடையனவாக கருதப்படுகின்றன. மரங்களை வழிபடுவது உலகெங்கிலும் இடம்பெறுகின்றது. மரங்களை வழிபட்டமைக்கு இலக்கியங்கள் சான்று தருகின்றன. படருவதற்க்கு கொழுகொம்பு இன்றித் தவித்த முல்லைச்செடிக்குத் தன் தேரை ஈந்தவன் பாரிமன்னன். இந்நிகழ்ச்சி இன்றும் இராமநாதபுர மாவட்டத்தில் ஆண்டு தோறும் பாரிவிழாவில் ஒரு காட்சியாகக் காட்டப்படுகிறது. அமாவாசை நாள் திங்கட்கிழமையில் வந்தால் அரச மரத்தையும் அதனருகே பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ள நாகக் கற்களையும் 108 தடவை அல்லது 216 அல்லது 324 அல்லது 432 என்ற எண்ணிக்கையில் வலம்வந்து அம்மரத்தை வழிபட்டு மகப்பேறு பெறவும், உடல்நலம் பெறவும் பிரார்த்திக்கும் வழக்கமும் நிலவுகின்றது. இத்தகைய வழக்கம் ஈழத்தின் பலபாகங்களிலும் நம்பிக்கையுடன் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக நயினை ஸ்ரீநாகபூசணியம்மன் ஆலயம், சண்டிருப்பாய் சீரணிநாகபூசணி அம்பாள் ஆலயம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இராமேஸ்வரத்தில் நாகப்பிரதிஸ்டை செய்வது மிகவும் சிறப்பாகவும் பயன்மிக்கதாகவும் கருதப்படுகிறது. அரசமரம் புனித மரமாகக் கருதப்படுவதால் அதன் வாதுகளையோ பிறபகுதிகளையோ பாமர மக்கள் விறகாகப் பயன்படுத்துவதில்லை. தொழில் நோக்குடன் அரச மரத்தை ஏலத்தில் எடுத்து விட்டால் அதைக் கோயில் மடப்பள்ளிக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விடுவர். சிறு சுள்ளிகளை யாகம் முதலிய புனிதச் செயல்களில் பயன்படுத்துவர் (சோமலெ.1975: ப.54).*

*புராதன காலக் கோயில்கள் மரங்களின் நிழலில் தான் அமைக்கப்பட்டன. இந்துமரபுப்படி ஒவ்வொரு கோயிலுக்கும் சிறப்பாக ஒரு மரம் உண்டு. இதனையே ‘தலவிருட்சம்’ என்பர். இவ்வகையில் மாமரம், புன்னைமரம், வேப்பமரம், அரசமரம், வில்வமரம், கடம்பமரம், பலாமரம் முதலிய பலவகை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.*

*சிலகோயில்களில் பழமையான புனிதமரங்களின் பழுதுபட்ட கிளைகளும், பட்டுப்போன வாதுகளும் அடிப்பகுதிகளும் புனிதமாக கருதப்பட்டுப் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மயிலாப்பூர் திருவள்ளுவர் கோயிலில் இருந்த மிகப்பெரிய இலுப்பை மரம் பட்டுப்போய்விட்டது அதனை செப்புத்தகட்டினால் போர்த்தியும் வைத்திருக்கின்றனர். இவ்வாறே ஏனைய பல கோயில்களில் பழமையான மரங்களின் எஞ்சிய பகுதிகளுக்கு வெள்ளிக்கவசமோ பிற உலோகங்களிலான தகடுகளோ போடப்பட்டுள்ளன. இதுபோன்று ஈழத்திலும் மாத்தளை முத்துமாரியம்மன் கோயில் தலவிருட்சம் பட்டுப்போய்விடவே அதனைப் பேணிப்பாதுகாத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*

*தென்னையை தென்னம்பிள்ளை என்று கூறுவதும் அதை ‘குழந்தை’ போன்று மிகவும் பாசத்துடன் வளர்ப்பதும் மரபு. தென்னம்பிள்ளையை வளரவிடாது வெட்டுவது, தான் பெற்ற குழந்தையைக் கொன்று விடுவதற்கு ஒப்பானதாகக் கருதப்படுகின்றது (சோமலெ.1975: ப.55).*

**4.2.1.13 உயிரின வழிபாடு**

*உயிரினங்களுள் பசு, நாகம், காளைமாடு, எருமை, காகம், கருடன் என்பவற்றை வழிபடும் மரபு நிலவிவருகின்றது. இவ்வகையில் பசு, உயிரினங்களில் பெரிதும் வழிபடப்பெறுவது. வெள்ளிக்கிழமைகளில் பசுவைக் குளிப்பாட்டி அதன் நெற்றி, முதுகு, வால் என்பவற்றுக்கு குங்குமம் இடுவர். பசு கன்று போடப்போகும் போது திருமணமான பெண்களும், திருமண வயதை அடைந்த பெண்களும் மிக்கமரியாதையுடன் பசுவை மும்முறை வலம் வருவர். இதனால் குழந்தைப்பேறு பெறலாம் என்ற நம்பிக்கை மக்களிடம் நிலவுகின்றது. இவ்வகையில் பசுவைத் தெய்வத்தன்மை பொருந்திய உயிரினமாகக் கருதப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அடுத்து நாகம் மிகவும் தெய்வீக முக்கியத்துவம் பொருந்தியது. நாகத்தைக் கொன்றால் கொன்றவனுக்குப் பல தீமைகள் நேரும் என்பர். அரச மரங்களுக்கு அருகே நாகம் போன்ற உருவில் கற்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டு வழிபடப்படுகின்றது. பாம்புப் புற்றுகளில் பால் ஊற்றி முட்டைகளையும்*

உடைப்பர். இத்தகைய காணிக்கைகளால் மகப்பேறு கிட்டும், கருச்சிதைவு ஏற்படாது, குறைப்பிரசவம் இடம்பெறாது என்பன மக்களின் நம்பிக்கையாகும்.

அரசமரத்துடன் வேம்பு அல்லது நெல்லி மரம் இணைந்திருந்தால் அவற்றைப் பெண்கள் வழிபடுவதனால் மலட்டுத்தன்மையை இழந்து விடுவர் என்றும், அவற்றைச் சுற்றி வருவதால் உடல் நலம் பெறுவதாகவும் மருத்துவர் கூறுகின்றனர். நாகபட்டினம், நாகர்கோயில், நாகமலை என்பன நாகத்தின் பெயரால் ஏற்பட்ட ஊர்களாகும். கருவுற்றிருக்கும் பெண் நாகத்தைக் கண்டால் அவள் பெற்றெடுக்கும் குழந்தைக்கு நாகத்தின் பெயர் இடும் வழக்கம் நிலவியது. சான்றாக நாகசாமி, நாகராஜன், நாகப்பன், நாகரத்தினம், நாகலிங்கம், நாகம்மாள், நாகநாதன், நாகபூசணி, நாகலட்சுமி போன்ற பெயர்களைக் குறிப்பிடலாம். நாகப்புற்று உள்ள இடங்களில் பெண்கள் பால் ஊற்றி பழங்கள் பூக்கள் படைத்து சூடம் ஏற்றி இந்துமதச் சம்பிரதாயப்படி சடங்குகள் செய்து வழிபடுவர். அப்போது அவர்கள்

‘புற்றுப்புற்று நாகமே
பூமி இடம் கொண்டவரே
மணிப்பிரம்பு போல
வால் அழகு நாகமே
சிறு சுளகு போல
படமெடுக்கும் நாகமே
குண்டு முத்துப் போல
கண்ணழகு நாகரே
பச்சரிசி போல
பல்லழகு நாகரே
பள்ளர் மகன் பள்ளன்
தேவேந்திர குடும்பன்
கொட்டி மண்வெட்டி எடுத்து
குளத்தருகே போனான்
இருபுறமும் பாதம் ஒடுக்கி
வழிவிடுவாய் நாகரே’

என்று நாகதம்பிரானை வேண்டிப்பாடும் பாடலாகும் (சோமலெ.*1975:* ப-*56*).

தமிழர்களின் தலையாய தொழில் வேளாண்மை. அவர்களது வாழ்வும் வளமும் வேளாண்மையைப் பொறுத்தன. எனவே தான் அவர்கள் காளைமாட்டைச் செல்வத்தின் சின்னமாகக் கொண்டனர். ஏரில் பூட்டவும் வண்டி ஓட்டவும் உதவுவது காளைமாடு. அதன் சாணம் வயலுக்கு வலுவான உரமாக உதவுகிறது. புராணங்கள் காளை மாட்டை சிவபெருமானின் ரி‘பவாகனமாக வருணிக்கின்றன. எனவே தான் உழவர்கள் கோயில்களுக்காளை மாட்டை அன்பளிப்பாக வழங்குகின்றார்கள். இவ்வாறு விடப்பட்ட காளைகள் எங்கும் சுற்றித்திரியவும் எதையும் சாப்பிடவும் உரிமை பெற்றிருந்தன. ஜல்லிக்கட்டு எனப்படும் மஞ்சிவிரட்டுக்களில் கோயில் மாடுகளுக்குப் பாக்குவைத்து அழைத்து அவற்றுக்குச் சிறப்பாக மரியாதை செய்வது வழக்கம்.

நீலகிரியிலுள்ள டோடா இனத்தவர் (தோதவர்) எருமையை வழிபடுகின்றனர். எருமையை வழிபட்டால் மறு உலகில் வசதியாக வாழ வழிபிறக்கும் என்பது அவர்களது நம்பிக்கை. தமிழ் இலக்கியங்களில் நீர்வளம் நிறைந்த மருதநிலத்துக்கு உரிய சிறப்பான உயிரினமாகவும், வளத்தின் எடுத்துக்காட்டாகவும் ‘எருமை’ போற்றப்படுகின்றது,

யானை உருவத்தால் மிகப்பெரிது. அது அரசர்களுடன் வைத்து எண்ணத்தக்கது. விநாயகப்பெருமானே யானை முகத்தான் ஆவர். இக்காரணங்களால் கோயில் விழாவில் யானைக்குத் தனியிடம் உண்டு. யானைகளை நன்கொடையாகக் கோயிலுக்கு எவராவது கொடுத்தால் மறுக்காமல் ஏற்றுக்கொள்ளும் பழக்கம் கோயில்களில் நிலவி வருகின்றது. யானைகள் கோயில் திருவிழாக்களில் ஊர்வலமாகச் செல்லுகின்றன. அத்துடன் நாள்தோறும் அபி‘கேத்தண்ணீர் கொண்டு வருவதற்கு தெப்பக்குளத்திற்கோ, ஆற்றங்கரைக்கோ யானைகள் செல்லும் போதெல்லாம் யானையை வழிபடுவதும் அதன் தும்பிக்கையில் சிறு காசுகளை வைப்பதும் மரபாகும் (சோமலெ,*1975:* ப.*57*).

சனிதோ‘முள்ளவர்கள் காகங்களை வழிபடுவது மரபாகும். காகத்திற்கு சோறிடுவது இறந்துபோன ஆன்மாக்களுக்கு மகிழ்ச்சி தரும் என்பர். காகம் சனிபகவானது வாகனமாக இருப்பதால்,

சனிக்கிழமைகளில் காகங்களுக்குச் சோறு படைக்கும் பழக்கம் நிலவுகின்றது. கருடன் வி'ணுவின் வாகனம். கருடன் வட்டமிடும் இடம் புனிதமாகி விடுகிறது. சிலசந்தர்ப்பங்களில் கும்பாபி'ேகம் நடைபெறும் போது, கருடன் கோபுரத்தை வட்டமிடுவது குறிப்பிடத்தக்கது.

#### 4.2.1.14 சிறுதெய்வ வழிபாடு

நாட்டுப்புறத் ெய்வங்களே 'சிறுதெய்வங்கள்' என அழைக்கப்படும். குடும்பத் தெய்வ வழிபாடும், குலதெய்வ வழிபாடும், ஊர்த்தெய்வ வழிபாடும் இவற்றிலடங்கும். வீட்டில் எவரேனும் துன்புற்றாலும், நோயுற்றாலும் குடும்பத்தெய்வத்திற்கு பூஜை செய்வர்.

'குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறவேன்'
'குலதெய்வத்தைக் கும்பிட்டு கும்மியடி'

என்பது குலதெய்வ வழிபாட்டின் சிறப்பினைக் கூறுகிறது. சில நேரங்களில் செல்வாக்கு மிக்க குலதெய்வம் ஊர்த்தெய்வமாகவும் மாறுவதுண்டு. சிறுதெய்வங்கள் வேதக்கடவுளோடு பெரும்பாலும் தொடர்பு கொள்ளாதவை. முழுமுதற் கடவுளாகக் கருதி வணங்கப்படாதவை. பூசை, திருவிழா முதலியவற்றில் திட்டவட்டமான வரையறை கிடையாது. பிராமணர் அல்லாதோர் பூசாரியாக இருப்பர். கோயில் போன்ற அமைப்பும் பெரும்பாலும் கிடையாது. செவிவழிச் செய்திகளும், கர்ணபரம்பரைக் கதைகளும் உண்டு. அச்சத்தின் காரணமாகவும் வளமைக்காகவும் இயற்கையின் சீற்றம் தணியவும் அம்மை, கொலரா போன்ற நோய்களைத் தடுக்கவும் நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடுகின்றனர். சிறுதெய்வங்களில் மாரியம்மன், ஐயனார் போன்றவை பெரும்பாரம்பரிய மரபை (பசநயவ வசயனவைழைெ) நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இதனால் இத்தெய்வங்களை இடைநிலைப்பட்ட தெய்வங்கள் என்று கூறுவர் (ஜோஸ்பின்கலா,கு.1992: பக்.352-353).

நாட்டுப்புறங்களில் நாட்டுப்புறத் தெய்வங்களே அதிகம் உள்ளன. அவை அவர்களது வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப்பிணைந்துள்ளன. நாட்டுப்புறத் தெய்வங்களே நாட்டுப்புறக்கலைகளின் வளர்ச்சிக்குக் காரணமாகின்றன. தமிழகத்திலும் ஈழத்திலும் மாரியம்மன் வழிபாடு நிலவுகின்றது. மாரியம்மன் போன்றே காளியம்மனையும் ஐயனாரையும் வழிபடுகின்றனர்.

'ஊருக்கு நேர் கிழக்கே உறுதியுள்ள ஐயனாரே'
'சத்தத்தை நீ கொடய்யா சரளிவிட்டு நான்படிக்க'

என்று ஐயனாரைப் பாடுகின்றனர். ஐயனார் காவல் காக்கும் தெய்வமாகக் கருதப்படுகிறார் (சக்திவேல்,சு. 1983: ப.226).

நாட்டுப்புறத் தெய்வங்களில் வேளாண்மையோடு தொடர்புடையவை பெண்தெய்வங்களாகும். நாட்டுப்புறத் தெய்வங்கள் தமது விருப்பங்களையும் நிறைவேற்றப்பட வேண்டிய வேண்டுதல் களையும் தெய்வநிலைக்குட்பட பூசாரி, அருள்வந்தோர் மூலமாக அறிந்துகொள்ளுகின்றனர். நாட்டுப்புறத் தெய்வங்கள் வளமையைக் கொடுப்பனவாகவும் ஆறு, குளம் முதலியவற்றைக் காப்பனவாகவும் கொடிய நோயிலிருந்து காப்பனவாகவும், கால்நடைகளை நோயிலிருந்து காப்பனவாகவும் கிராமத் தெய்வமாகவும் கருதுகின்றனர். இத்தெய்வங்களுக்குரிய வேண்டுதலை நிறைவேற்றாவிட்டால் துன்பம் நல்கும் என நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர். நாகரிக வளர்ச்சி ஏற்பட்டாலும் நாட்டுப்புறத் தெய்வ வழிபாடானது மக்கள் மத்தியில் நிலைபெற்ற வழிபாடாகவே இன்று வரை நிலவிவருவது தெளிவாகின்றது.

### *4.3 நாட்டுப்புறத் தெய்வ வகைகள்*

நாட்டுப்புறத் தெய்வங்களை சு.சக்திவேல் அவர்கள் ஐந்தாக வகைப்படுத்துகிறார்.

1. ஆண்தெய்வங்கள்
2. பெண்தெய்வங்கள்
3. குல தெய்வங்கள்
4. சாதித்தெய்வங்கள்
5. ஊர்த்தெய்வங்கள்

டாக்டர் துளசி இராமசாமி அவர்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை ஆறாக வகைப்படுத்துகிறார்.

1. ஊர்த்தெய்வங்கள்

2. இனத்தெய்வங்கள்
3. குலதெய்வங்கள்
4. மாலைத் தெய்வங்கள்
5. சமாதித் தெய்வங்கள்
6. துணைத் தெய்வங்கள், என்பனவாகும்.

### *4.3.1 கோயில் அமைப்பு*

நாட்டுப்புறக் கோயில்கள் பலவகைகளாகக் காணப்படுகின்றன. சில கோயில்கள் நிரந்தரக்கட்டிடங்களாகவும், வெறும் பீடங்களாகவும் காணப்படுகின்றன. விழாவிற்கேற்ப ஓலைப்பந்தல் இடும் கோயில்களும் உண்டு. சிலதேவதைகளுக்கு மண்ணாலாகிய மண்டபங்களும், கல்மண்டபங்களும் அமைப்பதுண்டு. கோயில்கள் அதில் உறையும் தெய்வத்தின் பெயரால் அழைக்கப்படுகின்றன. சில நாட்டுப்புறத் தெய்வங்களுக்கு ஆகம விதிப்படி கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. கருவறை, முன்மண்டபம், கொடிக்கம்பம், சுற்றுச்சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. மாரியம்மன் போன்ற தெய்வங்களுக்கு இத்தகைய கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. கர்ப்பக் கிரகத்தைச் சுற்றிப் பலதுணைத் தெய்வங்கள் இருக்கும். கிராமக் கோயில்கள் மரங்களுடன் தொடர்புடையனவாக உள்ளன. மரங்கள் வளமைக் குறியீடாகக் கருதப்படுகின்றன. பெரும்பாலான நாட்டுப்புறத் தெய்வங்கள் நீர்நிலைக்கருகில் இருக்கும். மக்களது வாழ்வில் நீர் முக்கிய பங்கு வகிப்பதால் நீர்நிலைக்கருகிலேயே வைத்துள்ளனர். ***(சக்திவேல்.சு,1983: ப.230)***

### *4.3.2 தெய்வங்களின் உருவ அமைப்பு*

நாட்டுப்புறத் தெய்வ உருவ அமைப்பை ஏழுவகையாகப் பகுத்து நோக்கலாம்.

1. மரத்தைத் தெய்வமாக வழிபடல். இதன் எச்சமாகத்தான் பெருங்கோயில்களில் தலவிருட்சத்தைக் காண்கிறோம்.
2. வடிவமற்ற கல்
3. வேல், சூலம், கத்தி
4. பலிபீடங்கள்
5. மாடத்தில் விளக்குவைத்து வழிபடல்
6. பந்தல் அல்லது ஓடு போன்ற அமைப்புக் கொண்ட தெய்வ உருவங்கள்
7. கோயில் போன்ற அமைப்புடைய இடத்திலுள்ள தெய்வ உருவங்கள்

### *4.3.3 வழிபாட்டு முறைகள்*

நாட்டுப்புறத் தெய்வங்களின் வழிபாட்டு முறைகளைப் பற்றி டாக்டர் சண்முகசுந்தரம் குறிப்பிடும் கருத்து நோக்கத்தக்கது. வேற்று மதத்தவர்களும் விரும்பிய சில நேரங்களில் இந்து தேவதைகளுக்குக் காணிக்கை செலுத்துகின்றனர். ஊருக்கு, சாதிக்கு, குடும்பத்திற்கு என்று தனித்தனியான தேவதைகள் உண்டு. நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடுவதற்கெனத் தனியாக எவருமில்லை. சிவன், திருமால் போன்ற பெருந்தெய்வங்களை வழிபடுபவர்களே அவற்றையும் வணங்குவர். வழிபாட்டு முறைகள் தெய்வத்திற்குத் தெய்வம் வேறுபடுவதுண்டு. இவ்வகையில் நோக்கினால் நாட்டுப்புறத் தெய்வங்களுக்கக்குக் கொண்டாடப்படும் விழாவைத் திருநெல்வேலி மாவட்டத்தில் ‘கொடை’ என்றும், மற்ற மாவட்டங்களில் ‘பொங்கவைத்தல்’ அல்லது ‘சாமிகும்பிடுதல்’ என்றும் அழைப்பர்.

கிராமத்தேவதைகளுக்கு சிலர் காணிக்கை மட்டும் செலுத்துவதுண்டு. காணிக்கை என பொதுவாக காசுகளை உண்டியலில் போடுவர். சிலர் துணிகளில் முடித்து வைத்து கோயில்களுக்கு சென்று போடுவர். இது ‘முடிந்து போடுதல்’ என்று அழைக்கப்படும். சிலர் தேவதைகளுக்கு எண்ணெயும் மாலையும் வாங்கிக் கொடுப்பர். அதை அக்கோயில் பூசாரி எண்ணெயோடு மஞ்சளையும் சேர்த்து உருவங்களில் பூசி மாலையிடுவர். சில தேவதைகளுக்கு பொங்கலிடுவர். அம்மன் தெய்வங்களுக்குச் செவ்வாய்க் கிழமைகளிலும், ஆண் தெய்வங்களுக்கு வெள்ளிக்கிழமைகளிலும் பொங்கலிடுவர். அத்துடன் இத்தேவதைகளுக்கு நடக்கும் கொடை விழாக்களில் ஒவ்வொரு நாளும் பொங்கலிடுவர். திருவிழாக்களின் போது ஊர்வலம் வரும் வேளைகளில் தேங்காய், பழம், பன்னீர், ஊதுபத்தி, சூடம், சாம்பிராணி, வெற்றிலை, பாக்கு ஆகியவற்றை அளிப்பர். இதனைச் ‘சொர்ணப்பம் சாத்துதல்’ என்பர். சிறுதெய்வ வழிபாட்டின் போது கரகமெடுத்து ஆடுவதும் உண்டு. இவ்வழக்கம் மாரியம்மன் போன்ற தேவதைகளுக்கு உரியதாகும்.

கிராமதேவதைகளுக்கு 'சிறப்பளித்தல்' என்ற நிகழ்ச்சியைக் கொண்டாட நன்நாளில் படையலிடுவதுடன் பலியுமிடுவர் சிறு பந்தலிடுவர் (சண்முகசுந்தரம்.சு,1982 : பக்.86-88).

மழை இல்லாக் காலத்து மழை வேண்டியும், விளைச்சல் பெருகவும் நோய்கள் வராமலிருக்கவும், பகையை விலக்கவும் கிராமதேவதைகளை வழிபடுவதுண்டு. இத்தகைய சந்தர்ப்பங்களில் பல்லி சகுணம் பார்த்தல், பூக்கட்டிப்பார்த்தல் என்பனவும் இடம்பெறும். கோயில் கும்பிடுவதற்கு அடையாளமாக காப்புக்கட்டுவர். சாமிகும்பிடும் நாளன்று மண்ணால் செய்த தெய்வ உருவச்சிலையைக் கொணர்ந்து கண்திறப்பர். சிலையைக் கோயிலில் வைத்தவுடன் பலியிட்டு பொங்கல் வைப்பர். இவ்வாறு பொங்கல் வைத்து, தேங்காய் பழம் வைத்துச்சாமி கும்பிடுவதைச் 'சிறப்பு நடத்துதல்' என்பர். பின்னர் மாவிளக்கு, முளைப்பாரி கொண்டுவருவர். முளைப்பாரியைச் சுற்றி பெண்கள் கும்மியடிப்பர். நேர்த்திக்கடனுக்காக அமாட்டையடிப்பதும் அங்கமளிப்பதும், காணிக்கை செலுத்துவதும் அக்கினிச்சட்டி எடுப்பதும் உண்டு. சில இடங்களில் தீக்குளி இறங்குவதும் உண்டு.

காணிக்கை செலுத்துதல், அங்கமளித்தல், காவடி எடுத்தல், கரகமெடுத்தல், பால்குடமெடுத்தல், மொட்டையடித்தல், மிருகங்களை நேர்ந்துவிடல் போன்ற சடங்குகளும் இடம்பெறும். சிறுதெய்வங்களுக்கு கருவாடு, மதுபானம் முதலியவற்றைப் படைப்பதுண்டு. சில தேவதைகளுக்கு ஆடு, கோழி, பன்றி பலியிடுவதுண்டு. சங்ககால மக்கள் பசுவினைப் பலியிட்டதாக அகநானூறு கூறுகின்றது. கோயில் பிரசாதங்களாக திருநீறு, குங்குமம், வேப்பிலை, துளசி, தீர்த்தம் முதலியவற்றை வழங்குவர். இத்தகைய விழாக்காலங்களில் எவ்வித வேறுபாடுமின்றி அனைவரும் பங்கெடுப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு மக்களின் எண்ணங்களையும் நம்பிக்கையையும் வழிபாட்டு முறைகளையும் தொன்மைச் சமயத்தின் கூறுகளினையும் பிரதிபலித்து நிற்பதனையும் காணமுடிகின்றது. நாட்டுப்புற மக்களின் வாழ்வில் ஏற்படும் இன்பதுன்பங்களுக்கும் நோய் நொடிகளுக்கும் நாட்டுப்புறத் தெய்வங்களையே தஞ்சமடைகின்றனர். மேலும் படையல்களும் பலியும் இட்டுத் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். இத்தகைய விழாக்களை எடுப்பதன் மூலம் உள்ளத்திற்க்கு மகிழ்வும், உறவுக்குத் தொடர்பும் ஏற்படுத்துகின்றனர்.

### *4.4 திருவிழாக்கள்*

'விழா என்னும் திறந்த வாசல் வழியே தான் நம் நாட்டு மக்களை அறிந்து கொள்ள முடியும்' என்கிறார் தாகூர். மனித சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்திருந்த போதிலும் அச்சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களாகும். ஆண்டுதோறும் உழைத்த மனிதன் ஓய்வு நேரத்தில் மகிழ்ச்சியாக இருக்க விரும்புவது இயல்பு. தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் திருவிழாக்கள் நடைபெற்று வருவதை அறிகின்றோம். சமுதாய மாற்றத்தால் புதிய திருவிழாக்களும் தோன்றுகின்றன. இவ்விழாக்கள் மூலம் கலையும் கலை அனுபவமும் மேலோங்கி வளர்கின்றன. கலைகளின் வளர்ச்சிக்கு திருவிழாதான் மூலகாரணம் எனின் மிகையாகாது. திருவிழாக்கள் அனைத்தும் கோயில்களுடன் பின்னிப்பிணைந்துள்ளன. சமயத்தின் கூறுகளாக மட்டுமன்றி கலைகளின் வளர்ப்புப் பண்ணையாகவும் கோயில்கள் திகழ்கின்றன. இத்தகைய திருவிழாக்கள் பண்பாட்டு உறவை வளர்க்கவும் ஒருமைப்பாட்டு உறவை வளர்க்கவும் பயன்படுகின்றன (சக்திவேல்.சு,1983: ப.235).

உலகில் இருக்கின்ற அனைத்துச் சமுதாயத்தினரும் விழாக்களைக் கொண்டாடுகின்றனர். இத்தகைய விழாக்கள் பல வகையில் கொண்டாடப்படுகின்றன. இவ்வகையில் சமயச்சார்பு பற்றிய விழாக்கள், வழிபாட்டு விழாக்கள், பருவமும் நாளும் பற்றிய விழாக்கள் எனக் கொண்டாடப்படுகின்றன. 'உலகெங்கிலும் வாழுகின்ற மக்கள் தாம் என்றும் இன்பத்தில் திளைக்க வேண்டும் என எண்ணுகின்றனர். ஆனால் அனைவரும் அவ்வாறு எண்ணிய இன்பத்தை எண்ணியாங்கு பெறுதல் இயலாது எனினும் வாழ்வில் சில நாட்களையாவது இன்ப நாளாகக் காண விரும்புகின்றனர். எத்தனை துன்பத்தில் பட்டுழன்றாலும் வாழ்வில் சில நாட்களாவது அனைவரும் ஒரு சேர இன்பத்தில் திளைக்க வேண்டும் என்று எண்ணிற்று. அந்த உள்ளத்தின் உணர்வே உலகில் விழாக்கள் தோன்ற வழிகாட்டியாய் அமைந்தது' என்று அ.மு.பரமசிவானந்தம் விழாக்கள் பற்றிக் கூறுகின்றார் (பரமசிவானந்தம்,அ,மு. 1967: ப.30).

விழாக்கள் பெரும்பாலும் மதச்சார்புடையனவாகவோ தொழிற்சார்புடையனவாகவோ இருக்கும். தொழில் சார்புடைய விழாக்கள் தொழில் சிறப்படைய வேண்டும் என்ற எண்ணத்தில் கொண்டாடப்படுவன. சமயச்சார்புடைய விழாக்களில் தெய்வ வழிபாடு கலந்திருக்கும்.

பொழுதுபோக்காக மட்டுமன்றி பயன்கருதியும் விழாக்கள் நடத்தப்படுகின்றன. நாட்டுப்புற விழாக்கள் மூலம் அம்மக்களின் பண்பாடும் பழக்கவழக்கங்களும் நாகரிகமும் வெளிப்படுகின்றன. திருவிழாக்கள் மகிழ்ச்சிக்காக மட்டுமன்றிப் பண்பாட்டுப் பரிமாற்றங்கள் நிகழவும் உறுதுணையாக உள்ளதுடன் சமூக ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டு உணர்வை வளர்க்கவும் பயன்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 5. நிறைவுரை

நாட்டுப்புறத்தெய்வ வழிபாடுகள் மக்களின் எண்ணங்களையும், நம்பிக்கைகளையும், வழிபாட்டு முறைகளையும் தொன்மைச்சமயத்தின் கூறுகளையும் பிரதிபலித்து நிற்பதைக் காணமுடிகின்றது. நாட்டுப்புற மக்களின் வாழ்வில் ஏற்படும் இன்பதுன்பங்களுக்கும் நோய்நொடிக்கும் நாட்டுப்புற தெய்வங்களையே தஞ்சமடைகின்றனர். படையல்களும் பலியுமிட்டுத் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். நாட்டுப்புறத் விழாக்களை எடுப்பதன் மூலம் உள்ளத்திற்கு மகிழ்வும் உறவுக்குத் தொடர்பும் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். எனவே நாட்டுப்புறத்தெய்வ வழிபாட்டை நாம் ஆழ்ந்து ஆராய்கின்றபோது தொன்மையான சமயத்தைப் பற்றி நன்கு அறிந்துகொள்ளமுடிகின்றது. அத்துடன் நாட்டுப்புறவழிபாடுகள் பற்றி அறிஞர்கள் கூறியுள்ள கருத்துக்கள், வழிபாட்டின் பிரிவுகள், நாட்டுப்புறத்தேவதைகள், மற்றும் திருவிழாக்கள் பற்றியும் இவ்வாய்வுக்கட்டுரை தெளிவுபடுத்துகின்றது.

## உசாத்துணைகள்

சண்முகசுந்தரம்.சு,(1982). நாட்டுப்புறவியல், மணிவாசகர் பதிப்பகம், மதுரை.

பண்பாட்டியல், மலர்1, இதழ்2, ஏப்ரல் 1997.கனகரத்தினம்.வை, நாட்டுப்புறத்தெய்வ வழிபாட்டில் பெரியதம்பிரான் வழிபாடு ஓர் அறிமுகம்

இராமநாதன்.ஆறு, (1986). நாட்டுப்புறவியல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

அறவாணன்.க.ப.(1979). பாம்பு வழிபாடு, திராவிட ஆபிரிக்க ஒப்பீடு, பாரிநிலையம் சென்னை

விசாகரூபன்.கி,(2004). நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம், மலர் பதிப்பகம்.

விக்னேஸ்வரி பவநேசன், (2019). இலங்கையில் கிராமிய இந்துத் தெய்வங்களின் வழிபாடு, அன்ரா டிஜிற்றல், கொக்குவில்.

முத்துச்சாமிப்பிள்ளை.மு,(1991). கோயிற்களஞ்சிய அறிமுகம், தஞ்சாவூர் தமிழ்ப்புத்தகாலயம்.

துளசி இராமசாமி, (1985). நெல்லைமாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

பாலசுப்பிரமணியம்.இரா,(1990). நாட்டுப்புற வாழ்வியல், சத்தியா வெளியீடு, சென்னை.

மோகன்.ஜெ.(1988). தீ மிதித்திருவிழா, (நீலகிரி மாவட்டம்), பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

கல்லாகவுடர். எச்.என்.(1992). படகர் உள்ளிட்ட நீலகிரி ஆதிவாசிகள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி, ஆதிவாசிகள் சக்தி, நீலகிரி பிரிவு

சக்திவேல்.சு., நாட்டுப்புற இயல் ஆய்வு (1983). மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சுப்பிரமணியம்.கா,(1980). சங்ககால சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

ஞானசேகரன்.தே.,(1992). நாட்டார் சமயம் தோற்றமும் வளர்ச்சியும், க்யூரி பப்ளிகேசன்ஸ், மதுரை.

ஞானசேகரன்.தே., *(1987).* மக்கள் வாழ்வில் மந்திரச்சடங்குகள், பார்த்தீபன் பதிப்பகம், மதுரை.

சோமலெ,*(1975).* தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், பாரிநிலையம், சென்னை

தாமோதரன்.சி, *(1988).* சிறுதெய்வ வழிபாடு, முதுதத்துவமாணி ஆய்வேடு, பாரதியார் பல்கலைக்கழகம்.

ஜோஸ்பின்கலா,கு.*(1992).* 'மாரியம்மன் இடைநிலைத் தெய்வம்', இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஆய்வுக் கோவை, புதுடெல்லி

பரமசிவானந்தம்.அ.மு.,*(1967).* தமிழ்நாட்டு விழாக்கள், தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை.

காந்தி.கா,*(1980).* தமிழகப் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

கைலாசபதி.க,*(1978).* பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், மக்கள் வெளியீடு, சென்னை.

லூர்து.தே,*(1976).* நாட்டார் வழக்காறுகள் ஓர் அறிமுகம், திருநெல்வேலி.

புறநானூறு, *(1972).* துரைசாமிப்பிள்ளை.அ,(உ.ஆ), கழக வெளியீடு, திருநெல்வேலி.

பவானந்தம்பிள்ளை, தற்காலத்தழிழகராதி

Nandhi.R.N.(*1973*). Religious Institutions and Cults in to the Deccan, Motilal Banarsidass, Delhi.

Tamil Lexican- vol -i,ii ,iv

Singaravelu.S, (1966), Social life of the Tamil, Department of Indian studies, University of Malasiya, Kulalampur.